| | | | | | |
|---|---|---|---|---|---|
| வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | 29/05/2024 | முதல் | 02/06/2024 |
| அறிக்கை எண் : | 043/ 2024 | வெளியீட்டு நாள் : | 28/05/2024 | | |

**திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (23.5.2024 முதல் 27.05.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 02-06-2024- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/05 | 24/05 | 25/05 | 26/05 | 27/05 | தேதி | நாள்-1 29/05 | நாள்-2 30/05 | நாள்-3 31/05 | நாள்-4 01/06 | நாள்-5 02/06 |
| 28.4 | 2.9 | 1.7 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 4 | 4 | 8 | 6 | 8 |
| 36 | 34 | 36 | 35 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 37 | 36 | 35 | 35 |
| 26 | 26 | 27 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 26 | 26 | 25 | 25 |
| 7 | 6 | 8 | 7 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 5 | 8 | 8 | 8 |
| 90 | 82 | 88 | 65 | 66 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 82 | 59 | 57 | 55 | 51 | | 40 | 40 | 40 | 40 | 40 |
| 8 | 3 | 6 | 8 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 14 | 10 | 8 | 8 |
| தென் கிழக்கு | 0 | மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | காற்றின் திசை | மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | மேற்கு | மேற்கு |

**குறுஞ்செய்தி :**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° - 27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 14 கி.மீ வேகத்தில், மேற்கு மற்றும் வடமேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (31 மே - 06 ஜூன் 2024):**

**மழைப்பொழிவு :**

31-05-2024 - 06-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

31-05-2024 - 06-06-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைந்து காணப்படும்.28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

31-05-2024 - 06-06-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 8 முதல் 14 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

29 மே முதல் 31 மே வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது 2- 3° செல்சியஸ் செல்சியஸ் அதிகரித்து காணப்படும். 35° செல்சியஸ் முதல் 37° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மிளகாய், மல்லிகை, கால்நடை.**

**மிளகாய்:**

மிளகாய் பயிரில் பாக்டீரியா இலைப்புள்ளி நோய் பரவலாக தென்படுகிறது. இவ்வகை நோய் தாக்குதலால் இலைகளின் மீது சிறிய அளவில் நீர் கசிந்தது போன்ற புள்ளிகள் தோன்றும். அதிகமாகப் புள்ளிகள் தோன்றும் போது இலைகள் பழுத்து பெருமளவில் உதிர்ந்து விடும்.

நோய் தீவிரமாகும் நிலையில் பழங்களின் மீதும் சிறுசிறு கறுப்பு நிறப்புள்ளிகள் தோன்றும் பின் பழங்கள் உதிர்ந்து விடும்.

இந்நோயைக் கட்டுப்படுத்த எக்டருக்க 500 லிட்டர் தண்ணீரில் 175 கிராம் அக்ரிமைசின் என்னும் எதிர் உயிரிப் பொருளைத் தெளிக்க வேண்டும்.

**மல்லிகை:**

மல்லிகைப் பூப் பயிரில் மொட்டுப் பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. தாக்குதலின் ஆரம்பநிலையில் பாதிக்கப்பட்ட மொட்டானது மஞ்சள் கலந்த சாம்பல் நிறத்தில் காணப்படும். மொட்டுக்கள் பெரிதாகாமல், சிறுத்து, காபி நிறத்தில் மாறி பின் காய்ந்து விடும்.

இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி என்ற அளவில் புரோபன்னோபாஸ் மற்றும் 20 கிராம் கார்டாப் ஹைட்ரோகுளோரைடு உடன் 10மில்லி ஒட்டுப்பசை சேர்த்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**கால்நடை:**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் எல்லா வயது ஆடுகளையும் தாக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன.

மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும். இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி துள்ளி விழும்.

இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரியன் உதித்து ஒரு மணி நேரம் கழித்து ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும்.

.